பணிநிறைவு வாழ்த்து!

திரு **கே. பலராமன்**



பணிநிறைவு கண்டார் **பலராமன்**
என்றறிய பலநாள் ஆனது!
அணியாய் ஆங்கவரை வாழ்த்தவோர்
வகையின்றிப் போனதுவே!
மணியான அன்புடயோர் நாளும்
மாறாமல் புன்னகைதே நம்மை
கனிவாக என்றும் ஈர்க்கும்,
கனிவுடைச் சொல்வேந்தன்!

இனியராம் நண்பர் பணிநிறைவை
இனியதாய்க் கண்டு நிறைந்தார்!
பிணியில்லா வாழ்வைச் சூடி,
பிரியத்தை என்றும் கொண்டு,
அணியாக யாவும் கொண்டு,
அருந்தமிழ்போல் வாழ்ந்திடுக!
இணையில்லா அன்பை கொண்டு,
ஈங்கவரை வாழ்த்துவேனே!



- அன்புடன்,
கு.ப.அசோகன்,
25-07-2023 (காலை 11.45)